**தலைப்பு 290 – கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் *திணைக்களத்தினால்* வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) ஆம் பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் வருமான வகையின் கீழ் 10.03.07.06 ஆம் இலக்க வருமான குறியீட்டின் பெறுமதியான ரூபா 32,497,474 தொகை நிதிக்கூற்றுக்களில் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் ஏனைய வருமான பெறுவனவாக காண்பிப்பதற்கு பதிலாக வரியல்லாத வருமானம் மற்றும் ஏனைய வருமானங்களாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 7(i) மற்றும் வருடாந்த வருமான மதிப்பீட்டின் பிரகாரம் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் வருமான வரி வருமானமொன்றாக கருத்தி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டுகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) திணைக்கள நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமல்லாத ஏனைய பெறுவனவுகளின் கீழ் ரூபா 176,826,426 வரை இருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான மாதாந்த பொழிப்பின் பிரகாரம் திணைக்களத்தின் ஏனைய வருமான பெறுவனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 188,022,375 ஆக இருந்தமையால் ரூபா 11,195,949 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி சரியானதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மாதாந்த பொழிப்புக்களின் பிரகாரம் திணைக்களத்தின் வருமானம் அல்லாத ஏனைய பெறுவனவுகளாக உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை . | கூட்டல் தவறுகள் பேரில் இந்த தவறு நேர்ந்துள்ளது. |

### 1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்களின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 639,936,960 எனவும் நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அத்திகதியில் மீதி ரூபா 644,987,568 என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 5,050,608 ஆன வேறுபாடு காணப்பட்டது. அவ்வாறே திறைசேரி பதிவேட்டின் பிரகாரம் சொத்துக்கள் அறிக்கையின் பிரகாரம் மொத்த கூட்டுத்தொகை பெறுமதி ரூபா 537,559,392 ஆக இருந்தது. குறித்த வேறுபாடு தொடர்பான ஒப்பிடப்பட்டு சரியான சொத்துக்களின் பெறுமதி இனங் காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | நிதியல்லாத நிலைமைக்கூற்று தயாரிக்கும் போது திணைக்கள புத்தகங்கள், திறைசேரி புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டு சரியான சொத்துக்களின் பெறுமதி இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இணங்குகின்றேன். நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்ப மீதி கணக்கீடு செய்யப்படாமையால் திறைசேரி பதிவேடு களில் ஆரம்ப மீதி இல்லாமல் காண்பிக் கப்படுகின்றது. ACA-6 இல் காணப்படும் சொத்துக்களின் பெறுமதி சரியானதாகும். கணக்கு தயாரிக்கும் போது மோட்டார் சைக்கிள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் விடுபட்டமையால் இத்தவறு ஏற்பட்டுள்ளது. |

### 1.6.3 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேதங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட வேண்டும் | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

### 1.6.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செய்மதி தகவல் சேவை வழங்கும் நிறுவனமொன்றுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 31,214,943 தொடர்பாக அந்நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை, கொடுப்பனவு களுக்குரிய பட்டியல்கள் மற்றும் அதனுடன் தொடர்பான ஆவணங்கள் மற்றும் புதிய சேவை வழங்கும் நிறுவனத்திற்கு ரூபா 8,089,401 கொடுப்பனவு தொடர்பாக உரிய ஆவணங்கள் போன்றவற்றை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் படாமையால் திருப்திகரமாக அவற்றை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | உடன்படிக்கையொன்றும் பட்டிய லொன்றும் சமர்ப்பிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஒரு நிறுவனத்திற்குரிய உடன்படிக்கை மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வழங்குனர் தெரிவு செய்வதற்குரிய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் படாமையால் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய அனைத்து ஆவணங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. |

### 1.6.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| (i) viii ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பந்தி | மேலதிக நேர படிகளை பெற்றுக் கொள்வதற்கு மேலதிக வேலைகள் குறிப்பாகவும் நியாயமாகவும் செய்யப்பட்டுள்ளதாக திணைக்கள தலைவரால் அல்லது அவரின் அதிகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட வேறொரு உத்தியோகத்தரால் அல்லது பிரத்தியேகமாக ஆராய்ந்து பார்த்து திருப்தியடைய வேண்டியதுடன் நிர்ணயிக்கப்பட்ட வேலை அளவொன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாக | ஏற்பாடுகளின் பிரகாரம் மேலதிக ரே வேலை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உரிய பரிசோதனை மற்றும் அறிக்கை வைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களில் மேலதிக நேர சேவையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களின் மேலதிக கடமைகள் தொடர்பான அவ்வாறு பரிசோதனையொன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பந்தி மற்றும் 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.6 ஆம் பந்தி | இடமாற்றம் பெற்றுச்சென்ற இரண்டு உத்தியோகத்தர் களிடம் இருந்து ரூபா 234,800 ஆன கடன் மீதியொன்று மூன்று மாதங்களுக்குள் தீர்வு செய்யப்படாதிருந்ததுடன் அச்சந்தர்ப்பத்தில் இடமாற்றம் வழங்கப்பட்டிருந்த திணைக்களத்தில் சேவை புரிவதாக உறுதிப்படுத்திக் கொண்டு குறித்த திணைக்களத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு மூன்றாம் மாதத்தில் கணக்கு பொழிப்பு மூலம் கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். அவ்வாறே கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கும் அறிவிக்க வேண்டும். எனினும், நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பந்தி மற்றும் 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.6 ஆம் பந்திகளில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இட மாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இட மாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளில் 03 மாதங்களுக்கு தீர்வு செய்யாத சந்தர்ப்பத்ங்களில் தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டு தீர்வு செய்யப்பட்டது. இதற்குப் பின்னர் அத்தகைய அறிவித்தல் எழுத்து மூலம் மேற்கொள்ளப்படும் |
| (iii) | XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4 ஆம் பந்தி | 08 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 690,216 ஆன கடன் மீதிகளில் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்க வில்லை. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களி டமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உரிய | ரூபா 690,216 தொகையான அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளில் ரூபா 486,812 தொகையான கடன் மீதி 2019 மே மாதம் கணக்கு பொழிப்பினூடாக ஊடாக தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதிகளில் ஒரு பகுதியை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காலப்பகுதியில் கடன் தொகையை தீர்வு செய்தல். முறைப்படி கடமைகளை நிறைவேற்றாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிவழிப்பதற்கு அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் அதனை கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசனக் குடிரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 118 | ஏற்பாடுகளின் பிரகாரம் திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்த வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அவ்வாறு ஏற்பாடுகளின் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் ரூபா 900,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப் பட்டிருந்த போதிலும், நிதிப் பிரமாணம் 118 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அரச கணக்குகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் பணிப்பாளர் நாயகமாக இருப்பதால் அந்த அங்கீகாரத்தின் பேரில் கொடுப்பனவு மேற் கொள்ளப்பட்டது. |
| (இ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2009 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதம் | சனி, ஞாயிறு தினங்களில் மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களில் உத்தியோகத்தர்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் கைவிரலடையாள பதிவு இயந்திரத்தை பயன்படுத்தா திருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் பொது நிர்வாக சுற்றறிக்கையின் 02.II பிரகாரம் கைவிரலடையாள பதிவு இயந்திரத்தை பயன்படுத்தியிருக்க வில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 01 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் கடந்த 03 ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்தினால் வழங்கப்படும் வெவ்வேறு சேவைகளுக்காக தற்போது அறவிடப்படும் கட்டணங்கள் திருத்தம் செய்யப்படாதிருந்ததால் அக் கட்டணங்கள் 15 சதவீதத்தினால் அதிகரித்துக் கொள்வதற்கு திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2018 சனவரி 01 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்திக்கு இணங்கும் வகையில் சேவைக் கட்டணங்கள் திருத்தம் செய்வதற்கு திறைசேரி செயலாளருக்கு தொடர்புபடுத்தப்பட வேண்டும். | சேவைக் கட்டணங்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. திணைக்களத்தினால் வழங்கப்படும் சகல சேவைகளுக்காக மீண்டும் மீளாய்வு செய்து சேவைக் கட்டணங்கள் திருத்தம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மிக விரைவில் அக்கட்டணங் ளைவ ர்த்தமானியில் வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | கேகாலை மாவட்ட கடற்றொழில் அலுவலகத்தின் 2018 ஆம் ஆண்டின் மே மாதம் முதல் நவம்பர் மாதம் வரை 07 மாதங்களுக்குரிய செயற்பாட்டு அனுமதிப்பத்திர வருமானம் அறிக்கையிடப் படாதிருந்ததுடன் ஏனைய 05 மாதங்களில் வருமான பெறுவனவு ரூபா 10,000 முதல் ரூபா 54,000 இற்கு இடைப்பட்டிருந்தது. அவ்வாறு நீண்டகாலமாக கடற்றொழில் செயற்பாடு இடம்பெறாமை மற்றும் செயற்பாட்டு வருமானம் கிடைக்காமை தொடர்பாக பரிசோதனைக்கு உட்படவில்லை. | ஆண்டு பூராகவும் செயற்பாட்டு அனுமதிப்பத்திர வருமானம் அறவிடப்பட்டிருக்கையில் ஒவ்வொரு ஆண்டும் சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டமை வெளிப்படுத்தப்படாதிருந்ததால் வருமானம் சேகரிப்பு சரியாக இடம்பெறுவதாக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | சர்வதேச கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக கடற்றொழிலாளர்களால் ஒவ்வொரு ஆண்டும் சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் செயற்பாட்டு அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஆதலால் ஆண்டு பூராகவும் வருமான சேகரிப்பொன்று இடம்பெறவில்லை. |
| (இ) | 16 உயிரற்ற சங்குகளை போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களை வழங்குவதன் மூலம் 2016 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட ரூபா 900,000 தொகை 2018 ஆம் ஆண்டின் | 2 ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர வருமானமொன்றாக இருப்பதால் வருமானத்தை மீள செலுத்தும் போது நியாயமான காரணங்கள் உள்ளதா எனப் பார்க்க | உயிரற்ற சங்கு போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் 2016 ஆம் ஆண்டு முதல் புவிச்சரிதவியல் சுரங்க அகழ்வு பணியகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததன் பேரில் |

| | | |
|---|---|---|
| செப்தெம்பர் மாதம் வியாபார சங்கமொன்று மூலம் கோரப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் வருமானத்திலிருந்து மீள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இவ்வருமானத்தை மீளச் செலுத்துவதற்கு தெளிவான காரணமொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. சட்டமா அதிபர் திணைக்களத்துடன் மேற்கொண்ட கலந்துரையாடல் பிரகாரம் இந்த அனுமதிப்பத்திரத்தை வழங்கும் செயற்பாடு புவிச்சரிதவியல் சுரங்க அகழ்வு பணியகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், 2 ஆண்டுகள் கடந்ததன் பின்னரும் திணைக்களத்தினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாமையால் பணத்தை மீள செலுத்தியுள்ளதாக அறிக்கை இடப்பட்டிருந்த போதிலும், 18 அனுமதிப்பத்திர பெறுனர்களும் பணம் செலுத்தியமைக்காக பற்றுச்சீட்டுக்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்காமை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக இருந்தது. | வேண்டும். | அத்திகதிகளில் குறித்த அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்காக திணைக்களததிற்கு பணம் செலுத்தி 18 பேருக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்க முடியாமையால் அப்பணம் திருப்பிச் செலுத்தப்பட்டது. |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு பிரயாணச் செலவினத்திற்கான ஆரம்ப மதிப்பீடான ரூபா 4.5 மில்லியன் தொகையில் 133 சதவீதம் வரை 10.5 மில்லியன் வரை ரூபா 6 மில்லியனால் அதிகரிப்பதற்கு காரணமாக, மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக நடாத்தப்படும் சர்வதேச கருத்தரங்கிற்காக உத்தியோகத்தர்களை பங்குபெற செய்தல் கட்டயாமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென அறிக்கையிடப்பட்டிருந்தது. | ஆண்டில் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடு களுக்காக நடைமுறைச் சாத்தியமான மட்டத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். நடைமுறைச் சாத்தியமற்ற மதிப்பீட்டின் மூலம் தேசிய பாதீட்டு ஏற்படும் பாதகமான தாக்கம் தொடர்பாக உத்தியோகத்தர் கூடுதலாக கவனம் செலுத்த வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு செலவினம் மீன்பிடி துறைக்குரிய மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளுக்கு உரியவனவாகும். |

| | | | |
|---|---|---|---|
| | அதன் பிரகாரம் மதிப்பீடு தயாரித்தல் நடைமுறைக்கு சாத்தியமான வகையில் மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 2018 சனவரி மாதம் குறைநிரப்பு மதிப்பீட்டு மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட 2018 வருடாந்த செயலாற்றல் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த மீன்பிடி கைத்தொழிலில் நவீன தொழில்நுட்ப வசதிகள் அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்திருந்த 20-01-07-2506 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழான ரூபா 243 மில்லியன் மொத்த தொகையும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் பெறுகை செயற்பாடு இடம்பெறாமல் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | ஆண்டில் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளுக்காக நடைமுறைச் சாத்தியமான மட்டத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | 2018 வரவு செலவு திட்டக் முன்மொழிவு மூலம் ஒதுக்கப்பட்ட ரூபா 243 மில்லியன் தொகையில் 55 அடிக்கு மேற்பட்ட பலநாள் மீன்பிடி படகுகள் 50 சதவீத சலுகை அடிப்படையின் கீழ் கடற்றொழிலாளர்களுக்கு வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு 5 படகுகளை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட காலநிலை மாற்றங்கள் காரணமாக அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்ததன் அடிப்படையில் அக்கொள்வனவுகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. |
| (இ) | 290-01-01-2603 ஆம் இலக்க இயந்திர உபகரண கையேற்பு செலவின விடயத்திற்கு ஆரம்ப நிதி ஏற்பாட்டின் கீழ் ரூபா 2 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கையில் நிதிப் பிரமாணம் 66 மாற்றங்களின் மூலம் மேலும் ரூபா 11,401 மிலியான நிதிஏற்பாடு மாற்றப்பட்டிருந்த போதும் ரூபா 13,401 மில்லியனான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன. | நடைமுறைச் சாத்தியமற்ற மதிப்பீட்டின் மூலம் தேசிய பாதீட்டிற்கு ஏற்படும் பாதகமான தாக்கம் தொடர்பாக உத்தியோகத்தர் கூடுதலாக கவனம் செலுத்த வேண்டும். | சோதனை செயற்பாட்டு நிலையங்களிற்காக வானொலிகளை கொள்வனவு செய்வதற்கான கட்டுநிதி கிடைக்காமையால் இந்நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்வதற்கு தேவையற்ற அடுத்த ஆண்டிற்காக | நிதிப்பிரமாணம் 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் அடுத்த ஆண்டிற்காக கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய செலவினம் | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை தவிர்ப்பதற்கு உரிய |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய செலவினம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் (iv) இன் கீழ் சுட்டிக்காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டில் சேமிப்புக்களை மிகைத்து காணப்படும் கொடுப்பனவிற்காக உள்ள பொறுப்புக்கள் இதன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டும். | உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் கொடுப்பனவு செய்வதற்குள்ள மேலதிக நேரப் படிகள் பொறுப்பு ரூபா 2.54 மில்லியனாக இருந்ததுடன், அச்செலவின விடயத்தின் நிதி ஏற்பாடு சேமிப்பு ரூபா 395 மில்லியன் மாத்திரமாக இருந்தது. அதன் பிரகாரம் நிதிஏற்பாடு தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் மேலதிக நேர கொடுப்பனவிற்காக கடமை கையளிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | கிடைக்கப் பெற்றுள்ள நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடங்கள் பல காணப்பட்டதால் நாளாந்த கடமை களுக்காக உத்தியோகத்தர்களை மேலதிக நேர கடமைகளில் ஈடுபடுத்துவதை கட்டுப்படுத்துவது மிகவும் சிரமமாக உள்ளது. |
| (இ) | 2018 திசெம்பர் 31 இல உள்ளவாறு உள்நாட்டு பிரயாணச் செலவினத்திற்காக கொடுப்பனவு செய்வதற்குள்ள பொறுப்புக்கள் ரூபா 1.55 மில்லியனாக இருந்த போதிலும் நிதி ஏற்பாடுகளிர் சேமிப்பு ரூபா 18,431 ஆக இருந்தது. இதன் பிரகாரம் அச்செலவின விடயத்தின் கீழ் வரும் சேமிப்பு தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் உள்நாட்டு பிரயாணங்கள் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடு தயாரித்தல் அல்லது வருடாந்த நிதி ஏற்பாட்டிற்குள் உள்நாட்டு பிரயாண செலவினங்கள் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் முதல் பிரயாணச் செலவினம் அதிகரிக்கப்பட்டமையால் இந்நிலைமை உருவாகியுள்ளது. நாடளாவிய ரீதியில் அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளமை மற்றும் அத்தியாவசிய கடமைகளுக்காக எப்போது பிரயாணங்களில் ஈடுபட நேர்வதால் இந்நிலைமை உருவாகியுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 195.4 மில்லியன் செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த 2428 இலத்திரனியல் டெப் மீனவர்களுக்கும் துறைமுக உத்தியோகத்தர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த இலத்திரனியல் டப்லட் கொள்வனவு செய்வதன் நோக்கமான அதுவரை காணப்பட்ட பதிவேட்டு புத்தக முறைமைக்கு பதிலாக இலத்திரனியல் டெப்லட் பயன்பாட்டிற்கு எடுத்தல் வெற்றிகரமாக செயற்படுத்தவில்லையென அவதானிக்கப்பட்டது. | குறித்த உபகரணங்களை பயன்படுத்தாமை தொடர்பாக கவனமொன்று செலுத்தி அவற்றை பெற்றுக் கொள்ளல் மற்றும் பின் தொடர் நடவடிக்கை மேற் கொள்ளப்படல் வேண்டும். | நூற்றுக்குநூறு கடற்றொழிலாளர்களாக செயற்படுத்த முடியுமென நம்ப முடியாது. இலவசமாக வழங்கப்படும் இந்த இயந்திரம் 2 ஆண்டுகளிலோ அல்லது 3 ஆண்டுகளிலோ செயற்படாமலோ பயன்படுத்த முடியாத வகையில் மாற்றமடையலாம். எவ்வாறாயினும், கடற்றொழிலாளரால் புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்பட வேண்டும். மிகவும் சிறிய சதவீதம் அளவில் இலக்ரோனிக் டெப் முறைமை செயற்படுத்தப்பட்டால் சாதகமான நிலைமையொன்றாக இருக்கும். |

## 3.2 செயற்றிட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 செப்தெம்பர் 28 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட கப்பல் அவதானிப்பு நிலைய கட்டிடங்களை விரிவாக்கும் ஒப்பந்தத்தின் 2019 பெப்ரவரி 27 ஆந் திகதியில் உள்ளவாறு விலகல் மற்றும் மேலதிக வேலைகளுடன் திரட்டிய செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 76.23 மில்லியனாக இருந்ததுடன் மேலும் செய்யப்பட்ட வேலையின் அளவு ரூபா 86.15 மில்லியனாக அதாவது மொத்த ஒப்பந்த பெறுமதியில் 53 சதவீதமான இருந்தது. அதன் பிரகாரம் நிர்மாணங்களுக்குரிய உடன்படிக்கை காலத்தை மிகைத்து 261 நாட்கள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், | உடன்படிக்கையின் பிரகாரம் உரிய காலப்பகுதியில் உரிய ஒப்பந்தத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்டு எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுத்தல். | இணங்குகின்றேன். கட்டிடத்தின் ஆரம்ப மதிப்பீடு மற்றும் திட்டம் மாற்றப்படாமையால் இந்நிலைமை உருவாகியிருந்தது |

| | | | |
|---|---|---|---|
| | வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மீன்கள் ஒன்று சேரும் துறையொன்றை வடிவமைப்பதற்காக நாரா நிறுவனத்திற்கு ரூபா 1.37 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டம் நிறைவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதியை விஞ்சி ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அச்செயற்பாட்டை நிறைவேற்ற முடியாமல் இருந்தது. | குறித்துரைக்கப் பட்ட காலப் பகுதியில் மீன்கள் ஒன்று சேரும் துறையொன்றை வடிவமைக்கும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு எதிர்பார்த்த நோக்கத்தினை நிறைவேற்றுதல் | 2019 மே மாதம் வரை அதன் ஆரம்ப வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளதாகவும் தேவையான நங்கூரம் மாத்திரம் அமைத்து பூர்த்தி செய்யப்படவில்லையெனவும் இவ்வாண்டு முடிவடைவதற்கு முன்னர் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்ப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2002 செப்தம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2019 யூன் 30 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 வெளிநாட்டு உதவி செயற்திட்டம்

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடற்றொழில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ திட்டத்தை தயாரிப்பதற்காக 2018 ஆம் ஆண்டிற்காக வெளிநாட்டு மானியங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 2.1 மில்லியனான நிதிஏற்பாட்டில் 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங் களுக்கான பட்டியல்களை தீர்வு செய்வதற்கு ரூபா 1.9 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டை அவ்வாண்டிற்குரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். | இந்த வெளிநாட்டு உதவி 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டதுடன் அச்செயற்பாடுகள் அவ்வாண்டிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக செலவினத் தலைப் பொன்றை பெற்றுக் கொள்ள திறைசேரியிடம் தொடர்ந்தும் கடிதங்கள் பரிமாற்றப்பட்ட போதும் 2018 ஆம் ஆண்டிலேயே செலவினத் தலைப்பொன்று வழங்கப்பட்டிருந்தது. ஆதலால் அந்நடவடிக்கை களுக்காக திறைசேரி உத்தியோகத்தர்களின் வாய்மொழி ஆலோசனை களின் பேரில் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |

## 3.5 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) கடற்றொழில் மற்றும் நீரியல் வழங்கல் திணைக்களத்தின் கப்பல் அவதானிப்பு நிலைய கட்டிடங்களை விரிவாக்கும் ஒப்பந்தம் | | |
| (i) பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.2(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீடு ரூபா 100 மில்லியனுக்கு மேற்படுமாயின் இது அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், ரூபா 141.20 மில்லியனான நீடிப்பு ஒப்பந்தத்தின் ரூபா 166.94 மில்லியனான பொறியியலாளர் மதிப்பீட்டிற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.2(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் பொறியியலாளர் மதிப்பீட்டிற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) (ii) கேள்வி கோரலுக்காக தயாரிக் கப்பட்டிருந்த அளவீட்டுப் பத்திரங்கள் பிரகாரம் ரூபா 166.94 மில்லியனான பொறியியலாளர் மதிப்பீடு பெறுமதி, கேள்வி மதிப்பீட்டின் போது ரூபா 168.13 மில்லியனாக இருந்த திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் இத்திருத்திய மதிப்பீட்டிற்காக மேற்குறித்த வழிகாட்டலின் பிரகாரம் அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.2(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் பொறியியலாளர் திருத்திய மதிப்பீட்டிற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iii) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.2(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் நேர் நிர்மாண கிரயத்தின் மீது நிகழத்தக்க / பௌதீக நிச்சயமற்ற தன்மை ரூபா 8.97 மில்லியனாக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 14.55 மில்லியனாக கணக்கிடப்பட்டு குறிப்பிடப்பட்ட காரணத்தினால் மதியுரை சேவைக் கட்டணங்கள் ரூபா 5.58 மில்லியனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.2(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் நேர் நிர்மாண கிரயத்தின் மீது நிகழத்தக்க / பௌதீக நிச்சயமற்ற தன்மைக்காக 10 சதவீதமான அளவிற்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | - மேற்படி - |
| (iii) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.1 மற்றும் 4.3.2(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கும் போதும் மேற்படி நிர்மாணம் தொடர்பாக கொடுப்பனவு செய்யும் போதும் செலுத்த வேண்டிய ஆகக்கூடிய நிச்சயமற்ற / நிகழத்தக்க அளவின் பிரகாரம் விலகல் ரூபா 8.97 மில்லியனாக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 15.93 மில்லியன் பௌதீக நிச்சயமற்ற தன்மைக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.அதன் பிரகாரம் அங்கீகாரமின்றி பெறுகை வழிகாட்டல் கோவைக்கு முரணாக ரூபா 6.95 மில்லியன் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.1 மற்றும் 4.3.2(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கும் போதும் கொடுப்பனவு பௌதீக நிச்சயமற்ற தன்மைக்காக 10 சதவீதமான அளவிற்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். செய்யும் போதும் | - மேற்படி - |
| (v) | ஒப்பந்த விலகல் ஒன்றுக்கான கொடுப்பனவு 2007 ஒக்தோபர் 03 ஆந் திகதிய 14 ஆம் இலக்க மேலதிகத்தில் திருத்திய பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.13.4 வழிகாட்டலின் பிரகாரம் | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.13.4 வழிகாட்டலின் பிரகாரம் பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட அளவினை வழங்குவதற்காக 5 சதவீதத்தை விட | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பட்டியல் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள சகல தொழில்துறைசார்களால் அளவீட்டுப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட அளவு அதிகரிப்பிற்காக 5 சதவீதம் இடமளிக்க வேண்டும். அவ்வாறே நிர்ணயிக்கப்பட்ட அளவையையும் பின்பற்றி முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் ஒப்பந்த விலை அதிகரிப்பிற்கு காரணமான விடயப்பரப்பு வேறுபட்டதன் பேரில் வழங்கப்படும் விலகல் கட்டளை மேற்கொள்ள கூடாது. எனினும், இந்த ஒப்பந்தத்திற்காக மதியுரை நிறுவனத்தினால் சேவை நாடுநரின் அங்கீகாரம் இல்லாமல் 31 சதவீதம் அல்லது ரூபா 43.8 மில்லினான விலகலொன்று வரும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கையில் 2009 யூன் 30 ஆந் திகதி வரை மதியுரை நிறுவனத்திற்கு ரூபா 6.44 மிலலியன் தொகை மதியுரைக் கட்டணங்களாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இடமளிக்க கூடாது மற்றும் அங்கீகாரம் இல்லாமல் ஒப்பந்த விலகல் அதிகரிப்பதற்கு காரணமான விடயப் பரப்பு வேறுபட்டதன் பேரில் வழங்கப்படும் விலகல் கட்டளை மேற்கொள்ளாமை | |
| (ஆ) | 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி ரூபா 1.45 மில்லியனான காப்பு சேர்வர் (Backup Server) கொள்வனவு | | - மேற்படி - |
| (i) | 4 நிறுவனங்களுக்கு கேள்வி ஆவணங்கள் வழங்கப்பட்டிருக்கையில் 05 நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. | கேள்வி ஆவணங்கள் வழங்குவது தொடர்பான சான்றுகள் கோவையிடப்படவில்லை | 4 நிறுவனங்களுக்கு மாத்திரம் கேள்வி ஆவணங்கள் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒரு நிறுவனத்திற்கை கையால் கையளிக்கப்பட்டது. |
| (ii) | 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.1(ஆ) மற்றும் (இ) பிரகாரம் தொழில்நுட்ப | பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.1 இன் பிரகாரம் விசேட மதியுரைகளைக் | 2.5.1 இன் பிரகாரம் ஒரு அங்கத்தவர் திணைக்களத்திற்கு வெளியே நிறுவன மொன்றின் |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டுக் குழுவிற்கு விடயம் தொடர்பான நிபுணத்துவ ஆலோசனை பெற்றுக் கொள்ளும் இயலுமை இருந்தும் திணைக்களம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒருவராக இருக்க வேண்டுமென இனங்காணப்பட்டதால் 2017 நவம்பர் 30 ஆந் திகதி அதனை குறித்து நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் தலைவராக நியமிக்கப்பட்டு தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழு திருத்தப்பட்டது. |
| (iii) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.1(இ) பிரகாரம் பெறுகை காலஅட்டவணை, பெறுகை முறைமை மற்றும் கேள்வி கோரல் பதிவேடு வகை தொடர்பான இணக்கப்பாட்டிற்காக பெறுகை குழுவினதும் தொழில்நுட்பக் குழுவினதும் ஒன்றிணைந்த முதலாவது கூட்டமொன்று நடாத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.1 பிரகாரம் பெறுகை குழுவினதும் தொழில்நுட்பக் குழுவினதும் ஒன்றிணைந்த முதலாவது கூட்டமொன்று நடாத்தப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்வரும் பெறுகை செயற்பாடுகளின் போது இதனை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 இன் பிரகாரம் ரூபா 500,000 இணை மிகைக்கும் பொருட்கள் சேவைகள் ஒப்பந்தங்களிற்காக உடன்படிக்கையொன்று கைச்சாத்திட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 இன் பிரகாரம் ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட வேண்டும். | - மேற்படி - |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் மாவட்ட கடற்றொழில் அலுவலகத்தின் மூலம் பகிர்ந்தளிக்கப்பதற்காக 1606 இலத்திரனியல் டெப்லட் கடற்றொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் கடற்றொழில் அலுவலக | கொள்வனவு செய்யப்பட்ட இலத்திரனியல் டப்லெட்களை உச்ச அளவில் பயன்படுத்து வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட போதிலும், கடற்றொழிலாளர்களாலும் | கொள்வனவு செய்யப்பட்ட இலத்திரனியல் டப்லெட் களை உச்ச அளவில் பயன்படுத்து வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு தற்போது அத்திட்டங்கள் வெற்றிகரமாக |

| | | |
|---|---|---|
| களஞ்சியங்களில் 374 இலத்திரனியல் டெபிலட் எஞ்சியிருந்தன. அவ்வாறே திணைக்கள களஞ்சியங்களில் காணப்பட்ட இருப்புக்களில் 256 டெப்லட் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட போதும் அவற்றை அலுவலகப் பயன்பாட்டிற் காக எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர்களாலும் பயன்படுத்தப்படாமையால் செலவிடப்பட்ட பணத்தில் உயர்ந்த பயனை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயற்படுத்தப்பட்டு வருகின்றன. |

### 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் கணக்குகள் மூலம் செய்மதிக் கட்டணங்களாக அறவிடப்பட்ட ரூபா 18.81 மில்லியன் தனியார் நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே அந்நிறுவனத்திற்கு மேலும் ரூபா 12.39 மில்லியன் திணைக்கள நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு ரூபா 12.39 மில்லியன்கள் திணைக்கள நிதியத்திலிருந்து சேவையொன்றை பெற்றுக்கொள்ளாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலாக இருந்தது. | அரசின் நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளுக்கு போதியளவு பொருளாதார இலாபமொன்றை பெற்றுக் கொள்வதற்கு உத்தியோகத்தர் களின் கவனம் செலுத்தப்பட வேண்டும். | இந்த ரூபா 12.39 மில்லியனான தொகை NSSL Global நிறுவகத்திற்கு 2018 மே 15 ஆந் திகதிய 18/1053/825/002 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் 69 உருப்படிகளின் கீழ் மேலதிக கொடுப்பனவிற்காக வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பேரிலாகும். NSSL Global நிறுவனத்தின் சேவைகள் திருப்திகரமாக இல்லாமையால் 2018 யூன் 07 ஆந் திகதிய உடன்படிக்கை மூலம் இச்செயற்பாடு E3X Global pvt Ltd நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டது. |

### 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கப்பல் அவதானிப்பு நிலையத்தை விரிவாக்கும் ஒப்பந்த நிர்வாகம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) விரிவான கேள்வி மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைக்கப்பட்ட கேள்விதாரர் கோரப்பட்ட பெறுமதி சேர் வரி 12 சதவீதமாக இருந்த போதும் கொடுப்பனவு செய்யும் போது 15 சதவீதமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் அங்கீகாரம் இன்றி பெறுமதி சேர் வரியாக ரூபா 1.55 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கொடுப்பனிற்காக அங்கீகாரம் கிடைத்துள்ளதா என பரீட்சித்து உரிய கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) உடன்படிக்கை காலத்தை மிகைத்து 261 நாட்கள் எடுக்கப்பட்டிருந்த போதும் வேலை பூர்த்தி செய்திராதிருந்ததுடன் உடன்படிக்கையனி பிரகாரம் நாளொன்றுக்கு ரூபா 70,600 வீதம் தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் அரசிற்கு அறவட வேண்டிய பணத்தை அறவிட வேண்டும். | - மேற்படி - |
| (iii) உடன்படிக்கையின் 28.2, 32.1, 36.2, 39.2, 39.6, மற்றும் 40.5 ஆகிய நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையால் ஆரம்ப ஒப்பந்த விலையில் 10 சதவீதத்தை விஞ்சி கொடுப்பனவு செய்யப் பட்டிருந்த ரூபா 6.95 மில்லியனான விலகல் பெறுமதியை நிதிப் பிரமாணம் 156 இன் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசிற்கு நட்டத்தை ஏற்படுத்தும் போது நிதிப் பிரமாணம் 156 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | - மேற்படி - |
| (ஆ) 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 10 மாவட்ட கடற்றொழிலாளர் அலுவலகங்களில் எஞ்சிய சம்பவப் பதிவேட்டு புத்தகங்கள் 2297 ஆக இருந்ததுடன் பிரதான அலுவலகத்தின் | எழுதுகருவி பயன்பாட்டினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | களஞ்சியத்தில் காணப்பட்ட இருப்பு 690 ஆக இருந்தது. அதன் பிரகாரம் எஞ்சிய புத்தக இருப்பின் கூட்டுத்தொகை 2987 ஆக இருந்ததுடன் அண்மித்த அளவில் அதன் பெறுமதி ரூபா 3.88 மில்லியனாக இருந்தது. இலத்திரனியல் டெப்லட் கொள்வனவிற்கு ஒப்பாக இச்சம்பவ புத்தகங்கள் அச்சீட்டு குறைக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை. | | |
| (இ) | ரூபா 960,000 தொகையான 8000 பரீட்சார்த்த அனுமதிப்பத்திர அச்சிடல் தொடர்பக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (i) மாவட்ட கடற்றொழிலாளர் மட்டத்தில் தேவைப்பாடு மதிப்பீடு செய்யப்படாமல் பரீட்சார்த்த அனுமதிப் பத்திரங்கள் அச்சிடப்பட்டிருந்தமை | தேவைப்பாடு இனங்காணப்பட்டு கொள்வனவு செய்யப்பட வேண்டும். | - மேற்படி - |
| | (ii) பரீட்சார்த்த அனுமதிப் பத்திரங்கள் பிரதான களஞ்சியத்திற்கு கையளிக்கப் பட்டு பொருள் பெறுவனவு தொடர்பாக உறுதிப்படுத்தப் படாமல் பட்டியலுக்காக ரூபா 292,050 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நி.பி 237 இன் பிரகாரம் பொருள் பெறுவனவு உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்தல் வேண்டும். | - மேற்படி - |
| | (iii) அனுமதிப்பத்திரங்கள் மாவட்ட கடற்றொழிலாளர் அலுவலகத்திற்கு பகிர்ந்தளிப்பதற்காக முறையான நடைமுறையொன்று பின்பற்றப்படாமை | பொருட்களை பெற்றுக்கொள்ளும் போதும் விநியோகிக்கும் போதும் முறையான நடைமுறையொன்று பின்பற்றுதல். | - மேற்படி - |

4. **நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொருளாதார அபிவிருத்தி சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு ஏற்படுத்துவத்தை அடிப்படையாக கொண்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க திணைக்களத்தினால் அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அவற்றை செயற்படுத்தும் போது தேவையான செயலாற்றல் குறிகாட்டி மற்றும் பௌதீக வளங்கள் முகாமைக்குரிய குறிகாட்டிகள் தயாரிக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் செயலாற்றல் குறிகாட்டிகளை உள்ளடக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் பௌதீக வளங்களை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |